சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

வா.சா. 2 நாள் : 08.04.2025

அசல் வழக்கு எண். 14/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | த/பெ | முனுசாமி |
| வயது | 75/25 | தொழில் | [illegible] |
| கிராமம் | மாப்படுகை | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 8/4/25
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

[signature]
8/4/25

OS.No. :14/2023

நாள் : 15.07.2025

வா.சா. : 2

பெயர் : மணி

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு தெரியும். அவர் என்ன வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும் தெரியும். சொத்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அது எத்தனை ஐட்ட சொத்து என்ற எண்ணிக்கை தெரியாது. சொத்து பத்திரங்கள் நான் பார்த்துள்ளேன். நான் நான்கு பத்திரங்களை பார்த்துள்ளேன். அசல் பத்திரம் காண்பித்தார்களா இல்லை நகலை காண்பித்தார்களா என்றால் அசல் பத்திரம் காண்பித்தார்கள். அவை யார் பெயரில் உள்ளது என்றால் வசவன் செட்டியார் பெயரில் உள்ளது. அவரின் மனைவி பெயர் நினைவில்லை. அவர் மனைவி எப்போது இறந்தார் என்றால் தேதி நினைவில்லை. வசவன் செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஜெயச்சந்திரன், செல்வி, மல்லிகா, காமராஜ், பாஸ்கர், சம்பத் ஆகியோர் வாரிசுகள் மற்றவர்கள் பெயர் தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான்தான் சொன்னேன். அதில் வாதிக்குரிய பாகத்தினை பிரதிவாதிகளிடம் பிரித்து கொடுக்க நேரடியாக நான்தான் கேட்டேன். எப்போது கேட்டேன் என்ற விவரத்தை வாக்குமூலத்தில் சொல்லவில்லை வழக்கிற்கு மூன்று மாதத்திற்கு முன்பு கேட்டேன். எனக்கு நிறைய நீதிமன்ற வழக்குகளுக்கு சாட்சி சொன்ன அனுபவம் உண்டு என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தான் முதலில் சாட்சியமளிக்கிறேன். வாதிக்கு ஆதரவாக பணம் வாங்கிகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வாதி, பிரதிவாதிகளை தெரியாது என்றால் சரியல்ல 25 வருடமாக தெரியும்.

பி. மணி

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இடது கம்யூனிஸ்ட் கட்சியில் பொறுப்பில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. வசவன் செட்டியார் அரிசிக்கடை வைத்திருந்தார். பழனியம்மாளை எனக்கு சரியாக நினைவில்லை. அவர் என்ன தொழில் பார்த்தார் என்று தெரியாது. எனக்கு இருவரையும் தெரியாது என்றாலும் வாதிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எப்போதும் நீதிமன்றங்களுக்கு வந்து பொய் சாட்சியம் அளிப்பது தொழிலாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

15/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

15/7/25